# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 94** **தேதி 23.09.2011**

## விருப்ப ஓய்வு திட்டம்
## BSNL க்கும் அதன் ஊழியர்களுக்கும் ஆபத்து

20.09.2011 அன்று BSNL நிர்வாகம் விருப்ப ஓய்வு திட்டம் தொடர்பான அதன் முன்மொழிவினை BSNL ஊழியர் சங்கத்திடம் வழங்கி அது தொடர்பாக நமது பார்வையினை கேட்டுள்ளது. விருப்ப ஓய்வு திட்டம் என்பது BSNLக்கும் அதன் ஊழியர்களுக்கும் மிகப்பெரிய கேடாக விளையும் என்பதால் BSNL ஊழியர் சங்கமும், அதேபோல கூட்டு நடவடிக்கைக் குழுவும் இதனை எதிர்த்து போராட்டத்தில் இறங்குவது என முடிவு செய்துள்ளது. கீழ்கண்ட காரணங்களால் நாம் விருப்ப ஓய்வு திட்டத்தை எதிர்க்கிறோம்.

**1. விருப்ப ஓய்வு திட்டம் கொள்கையில் தவறு நடைமுறையில் தோல்வி:-**

நிறுவனம் நஷ்டமடைவதற்கு ஊழியர்களும் அவர்களுக்கான ஊதியத்தில் ஏற்பட்டுள்ள பெரும் செலவினமே காரணம் என குற்றம் சாட்டுவதுதான் விருப்ப ஓய்வு திட்டத்தின் சாராம்சம் என்பதால் கொள்கை அளவிலேயே அது தவறாகிறது. ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதாலேயே நிறுவனத்தின் நஷ்டம் குறைக்கப்பட்டு லாபம் அதிகரிக்கப்படும் என்ற தவறான அனுமானத்தின் அடிப்படையில் அமைந்தது தான் விருப்ப ஓய்வு திட்டம். MTNL நிறுவனத்தில் இதுவரை மூன்று முறை விருப்ப ஓய்வு திட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது. ஆனால் அது MTNLக்கு மேலும் அதிக நஷ்டத்தையே ஏற்படுத்தி உள்ளது. எனவே விருப்ப ஓய்வு திட்டம் என்பது கொள்கையில் தவறான, நடைமுறையில் தோல்வி கண்ட ஒரு திட்டம் என்பது நிரூபனமாகிறது.

**2. சேவையில் இருந்து ஒரு லட்ச ஊழியர்களை பெருந்திரள் பணி நீக்கம்:-**

குறைந்த அளவு ஊழியர்களை வேலை நீக்கம் செய்தது என்பது MTNLஐ நஷ்டத்தில் இருந்து காப்பாற்ற முடியவில்லை என்பதால் BSNLல் பெருந்திரள் பணி நீக்கம் செய்வது என நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள 2,76,000 ஊழியர்களில் ஒரு லட்சம் ஊழியர்களை பணி நீக்கம் செய்யும் நோக்கத்தோடு இந்த திட்டம் உள்ளது. ஊழியர்கள் மீது பெருந்திரளான தாக்குதல் என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

**3. இது விருப்ப ஓய்வு திட்டம் அல்ல கட்டாய ஓய்வு திட்டமும் தான்:-**

ஒரு லட்சம் ஊழியர்களை பணி நீக்கம் செய்வது என்று இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதால் இது விருப்ப ஓய்வு திட்டம் அல்ல என்பது நிரூபனமாகி உள்ளது. அந்த இலக்கை அடையும் வகையில் ஊழியர்கள் பல்வேறு வழிகளில் கட்டாயப்படுத்தப் படுவார்கள். எனவே இது நடைமுறையில் கட்டாய ஓய்வு திட்டமே ஆகும்.

**4. மேலும் தாக்குதல்கள் அதிகரிக்கும்:-**

விருப்ப ஓய்வு திட்டத்தில் செல்லும் ஊழியர்கள் உருவாக்கப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு தொலைபேசி நிலையங்களை பராமரிப்பது உள்ளிட்ட பல் வேறு பணிகள் தருவதை நோக்கமாக இந்த திட்டம் கொண்டுள்ளது. அதன் பின் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு வேறு என்ன பணி இருக்க முடியும். அடுத்த தவணையில் அவர்களும்

வெளியேற்றப்படுவார்கள். தற்போதுள்ள 2,76,000 ஊழியர்களை AIRTEL நிறுவனத்தில் உள்ள 25,000 ஊழியர்கள் என்பதற்கு இணையாக குறைப்பது என்பது தான் இதன் உண்மையான இலக்கு.

**5. BSNL நிறுவனத்தை தனியார்மயமாக்கலின் ஒரு படி:-**

கீழே தரப்பட்டுள்ள விவரங்களின் படி விருப்ப ஓய்வு திட்டம் என்பது BSNL மற்றும் அதன் ஊழியர்களின் மீது பொருளாதார ரீதியாக எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட பெருந்திரள் விருப்ப ஓய்வு திட்டம் என்பது பொருளாதார ரீதியாக தேவையற்றது. இது BSNLஐ தனியார் மயப்படுத்துவதற்கு தயார் படுத்துகின்ற வகையில் பெரும்பாலான ஊழியர்களை வெளியேற்றுவதுதான் இதன் நோக்கம்.

**6. விருப்ப ஓய்வு திட்டத்திற்கு நிதி ஒதுக்குவது BSNLக்கு கூடுதல் சுமை:-**

**(அ)** குறைந்த அளவு லாபமீட்டும், நஷ்டம் அடையும், நலிவடைந்த நிலையில் உள்ள நிறுவனங்களில் விருப்ப ஓய்வு திட்டத்திற்கான அரசு உதவி என்பது வங்கி இருப்பு இல்லாத நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என பொதுத்துறை நிறுவனங்களுக்கான இலாகாவின் அலுவலக குறிப்பாணை எண்:-2(32)/97-DPE(WC)/GL-XXII dated 05.05.2000ன் பாரா எண் 8 தெரிவிக்கிறது. ஒரு லட்சம் ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு வழங்கப்படுவதற்கு உடனடி செலவு என 18,181 கோடி ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது(Exgratia:-Rs.8,655Crore: Pension commutation:Rs.3,474Crore, Gratuity:Rs.3,347Crore: Leave encashment:Rs.2,455Crore: TA:Rs.250Crore). மேலே குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவு எண்ணின் அடிப்படையில், ஊக்கத் தொகையாக வழங்க உள்ள 8,655 கோடி ரூபாய்களை BSNLநிறுவனம் கேட்டுள்ள படி அரசு நிதி வழங்குவது என்பது இயலாத காரியம். எனவே அதற்காக வங்கியில் இருந்து BSNL நிறுவனம் கடனாக பெற வேண்டும். இது BSNL நிறுவனத்திற்கு கூடுதல் சுமையாகும்.

**(ஆ)**ஓய்வூதியம் தொடர்பாக தொலைதொடர்பு இலாகவின் உத்தரவு என்பது, BSNL நிறுவனம் வழங்க இருக்கும், உரிமக் கட்டணம், Dividend, Corporate Tax, excise duty மற்றும் service tax ஆகியவற்றின் மொத்த மதிப்பில் 60%க்கு மேல் ஓய்வூதிய செலவு ஏற்பட்டது என்றால் அந்த மேம்பட்ட தொகையினை BSNL நிறுவனம் வழங்க வேண்டும் என தெரிவிக்கிறது. ஒரு லட்சம் ஊழியர்களுக்கு ஒரே சமயத்தில் விருப்ப ஓய்வு கொடுக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கினோம் என்றால் ஓய்வூதிய செலவு என்பது 60%க்கும் மேல் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வரும். அந்த சுமையை BSNL நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவும் BSNLக்கு கூடுதல் சுமைதான்.

BSNL நிறுவனம் ஏற்கனவே ஒரு நஷ்டம் அடைந்து வரும் நிறுவனமாக உள்ளதால், இது போன்று கூடுதல் சுமைகளை ஏற்றுக் கொண்டு விருப்ப ஓய்வு திட்டம் என்ற பெயரில் ஊழியர்களை வெளியேற்றுவது என்பது புத்திசாலித்தனமாக இருக்காது.

**7. விருப்ப ஓய்வு திட்டத்தால் ஊதியம் மிச்சமாகும் என்பது மாயமானது:-**

குஜாராத் மாதிரியின் அடிப்படையிலான BSNL நிறுவனம் முன்மொழிந்துள்ள விருப்ப ஓய்வு திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் ஊழியர்களை வெளியேற்றுவதற்கான உடனடி செலவு என்பது 18,181 கோடி ரூபாய்கள். இந்த உடனடி செலவிற்கு எதிராக ஒரு லட்சம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புவதன் மூலம் 2012-13 முதல் 2026-27 வரையிலான காலத்திற்கான BSNLக்கான சேமிப்பு என்பது 35,266 கோடி ரூபாய்களாக கணக்கிடப்பட்டுள்ளது. இன்று செலவிடப்படும் 18,181கோடி ரூபாய்களை பத்து சதவிகித வட்டி தரும் வங்கியில் முழுமையாக டெபாசிட் செய்தோம் என்றால் 2026-27 ஆம் வருடத்தில் நமக்கு சுமார் 60,000கோடி ரூபாய்கள் கிடைக்கும். இது சேமிக்கப்படுவதாக சொல்லப்படும் 35,266 கோடி ரூபாய்களை விட அதிக தொகையாக இருக்கும். எனவே விருப்ப ஓய்வு திட்டம் என்பது BSNL நிறுவனத்திற்கும் நஷ்டம் ஏற்படுத்தும் திட்டமாகும்.

இது போன்று மிகப்பெரிய நஷ்டத்தோடு விருப்ப ஓய்வு திட்டத்தை அமுல் படுத்த BSNL நிறுவனத்தை நிர்பந்திப்பதை விடுத்து அரசாங்கம், கிராமப்புற தரைவழி சேவை உள்ளிட்ட பல சமூக தேவைகளுக்கான சேவைகளை தருவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட தேவையான நிதியை BSNL நிறுவனத்திற்கு வழங்கியது என்றால் அது BSNL நிறுவனத்தினை மீண்டும் லாபமீட்டும் நிறுவனமாக மாற்ற உதவும்.

## 8. விருப்ப ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அதிக இழப்புகள் ஏற்படும்:-

### (அ) 60 வயது வரை பணியில் இருந்தால் ஊழியருக்கு கிடைக்கும் மாதாந்திர ஊதியத்தை விட விருப்ப ஓய்வு திட்டத்தில் செல்பவருக்கு வருமானம் குறையும்.-

நிர்வாகம் கொடுத்துள்ள கணக்கீட்டின் படி NE-7 ஊதிய விகிதத்தில் பத்தாவது நிலையில் உள்ள 45 வயது உள்ள ஒரு ஊழியருக்கு ஊக்கத் தொகைக்கான வட்டி மற்றும் ஓய்வூதியம் என்பது 20,695/- ரூபாயாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் விருப்ப ஓய்வில் செல்லாமல் தொடர்ந்து பணியில் இருந்தார் என்றால் அவருக்கு கிடைக்க இருக்கும் ஊதியம் என்பது 26,006/- ரூபாயாக இருக்கும்.(Basic:- Rs.14,680/- + DA Rs.6,923/- + HRA 30% Rs.4,403/-). எனவே ஒருவர் விருப்ப ஓய்வில் சென்றார் என்றால் அவருக்கு உடனடி இழப்பு என்பது 26,006-20,695 = 5,311 ரூபாய். மேலும் அவர் 60 வயது வரை பணியில் இருந்தார் என்றால் 15 ஆண்டு ஊதிய உயர்வும், ஒன்று அல்லது இரண்டு பதவி உயர்வும் பெற்றிடுவார். எனவே அவர் தொடர்ச்சியாக பணியில் இருந்தார் என்றால் அவருடையா மாத ஊதியம் என்பது இதைவிட அதிகமாகவே இருக்கும். மேலும் அவர் 60 வயதில் ஓய்வு பெறும் சமயத்தில் அவருடைய அடிப்படை சம்பளம் என்பது 16 அல்லது 17 அதிக ஆண்டு ஊதிய உயர்வு தொகையுடன் அதிகமாக இருக்கும். எனவே அவரது அப்போதைய ஓய்வு கால பயன்கள் என்பது தற்போது அவர் வாங்குவதை விட மிக அதிகமாகவே இருக்கும். எனவே விருப்ப ஓய்வு திட்டத்தினால் ஊழியர்களுக்கு மிகப்பெரிய நஷ்டம் தான் ஏற்படும்.

### (ஆ)ஊக்கதொகையில் வருமான வரி:-

5,00,000 ரூபாய்க்கு அதிகமாக உள்ள ஊக்கத் தொகைக்கு 33% வருமான வரி செலுத்த வேண்டும். எனவே வாங்கும் ஊக்க தொகையில் கணிசமான தொகையை வருமான வரியாக ஊழியர்கள் இழப்பார்கள்.

### (இ)ஓய்விற்கு பின்னும் விருப்ப ஓய்வு திட்டம் என்பது ஒரு தாக்குதல் தான்:-

இந்த பெருந்திரளான வெளியேற்றத்திற்கு அடிப்படையான காரணம் BSNL நிறுவனத்தை தனியார் மயமாக்கத்தான். BSNL நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டது என்றால் ஓய்வூதியதாரருக்கு மருத்துவ திட்டம்(BSNL MRS) இருக்காது. ஓய்வூதியத்திற்கு தனியார் மயமாக்கப்பட்ட நிறுவன்ம் நிதி ஒதுக்காது. அது போன்ற சூழ்நிலையிலும் ஓய்வூதியத்தை தானே தருவதாக அரசு உறுதிமொழி கூறியிருந்தாலும் அது நம்ப தகுந்தது அல்ல. கிராமப்புற தரைவழி தொலைபேசி இணைப்புகளுக்கான நஷ்டத்தை BSNL நிறுவனத்திற்கு ஈடுகட்டுவதாக கூறிய அரசாங்கம் ஒரு சில ஆண்டுகள் கழித்து தான் கொடுத்த உறுதி மொழியை மீறி அதனை நிறுத்தி விட்டது நாம் கவனிக்க வேண்டிய அம்சம். எனவே விருப்ப ஓய்வு திட்டம் என்பது ஓய்வூதியத்திற்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையை உருவாக்கும்.

மேலே சொன்ன அடிப்படையில் இந்த முன்மொழிவு என்பது BSNL நிறுவனத்திற்கும், அதன் ஊழியர்களுக்கும் ஊறு விளைவிப்பதாக இருப்பதால் இந்த திட்டம் உடனடியாக திரும்ப பெற வேண்டும்.

## BSNL நிறுவனத்தை லாபமீட்டக்கூடியதாக மாற்றுவதற்கான மாற்று ஆலோசனைகள்

1. 2010-11 ஆம் ஆண்டை விட 2011-12 ஆம் ஆண்டில் 25% அதிக வருவாயை BSNL நிறுவனம் சேவையின் மூலம் லாபமீட்ட வேண்டும் என நிர்வாகமும் தொலைதொடர்பு இலாகாவும் இலக்கு நிர்ணயித்துள்ளது. சேவைகளின் மூலம் 2010-11 ஆம் ஆண்டிற்கான வருமானம் என்பது 27,000கோடி ரூபாய்கள். அது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 25 சதவிகிதம் அதிகரித்தது என்றால் 2011-12 ஆம் வருடத்திற்கான வருமானம் என்பது 33,750 கோடி ரூபாயாக இருக்கும். 2011-12 ஆம் ஆண்டிற்கான செலவு 37,000 கோடி ரூபாயாக இருக்கும் என BRPSEக்கு நிர்வாகம் ஏற்கனவே தகவல் கொடுத்துள்ளது. எனவே 2010-11 ஆம் ஆண்டில் BSNL நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்த 6,384 கோடி ரூபாய் நஷ்டம் என்பது 2011-12ஆம் ஆண்டில் 3,250 கோடி ரூபாயாக குறையும்.
2. ஒரு சமூக கடமையாக BSNL நிறுவனம் பராமரித்து வரும் கிராமப்புற தரைவழி தொலைபேசிகள் மூலம் ஆண்டொன்றிற்கு 10,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. BSNL நிறுவனம் உருவாக்கப்படும் சமயத்தில் இந்த இழப்புகள் முழுமையாக ஈடுகட்டப்படும் என அரசாங்கம் தெரிவித்தது. 2005-06 ஆம் ஆண்டில் BSNL நிறுவனம் இழப்பீட்டு தொகையாக 8,000 கோடி ரூபாய்களை பெற்றது. ADC கட்டணம் என்ற முறையில் தனியார் நிறுவனங்களிடம் இருந்து 5,000 கோடி ரூபாய்களும், உரிமக் கட்டணம் மற்றும் ஸ்பெக்ட்ரம் கட்டணம் திருப்பி தருவது என்ற பெயரால் 3,000 கோடி ரூபாய்களும் தரப்பட்டது. அதற்கு பின் இந்தோ- அமெரிக்க CEO Forum மற்றும் தனியார் தொலைதொடர்பு இயக்குனர்கள் என்ற பெயராலே இந்திய அமெரிக்க பன்னாட்டு பகாசூர நிறுவனங்களின் நெருக்குதல் காரணமாக அந்த இழப்பீட்டு தொகை என்பது 2,000 கோடி ரூபாய்களாக குறைக்கப்பட்டு அது தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டு விட்டது. இந்த 2,000 கோடி ரூபாய் இழப்பீடு என்பதை தொடர்ந்து வழங்க வேண்டும் என BSNL நிர்வாகம் முயற்சி செய்துவருகிறது; அரசாங்கமும் அதனை இதுவரை நிராகரிக்கவில்லை. இந்த இழப்பீட்டு தொகையான 2,000 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என்றால் 2011-12ஆம் ஆண்டிற்கான நஷ்டம் என்பது வெறும் 1,250 கோடி ரூபாயாக மட்டுமே இருக்கும். ஆனால் கிராப்புற தரைவழி சேவைகளால் ஏற்படும் உண்மையான இழப்பான 8,000 முதல் 10,000 கோடி ரூபாய்களை அரசாங்கம் முழுமையாக ஈடுகட்டியது என்றால் நஷ்டத்திற்கு பதிலாக BSNL நிறுவனம் லாபமீட்டும் நிறுவனமாக மாறி விடும். அதே போல அரசின் சமூக கடமைகளை நிறைவேற்றுவதற்காக BSNL செய்து வரும் பொருளாதார ரீதியாக கட்டுப்படி ஆகாத மாநிலங்களிலும், பகுதிகளிலும் வழங்கும் 3G மற்றும் BWA சேவைகள், தந்தி சேவைகள் உள்ளிட்டவைகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும்.
3. எனவே நிர்வாகம் தேவையான கருவிகளை காலத்தே வாங்க வேண்டும். BSNLன் சந்தை பங்கை உயர்த்த வேண்டும். ஊழியர்களின் ஒத்துழைப்போடு நமது செயல் திறனை அதிகரிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 25% அதிக வருவாயை எட்ட வேண்டும். அதேபோல கிராமப்புற தரைவழி சேவைகள் மூலமாக ஏற்படும் இழப்பை முழுமையாக ஈடுகட்ட அரசாங்கத்தை முழுமையாக நிர்பந்திக்க வேண்டும். BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகளும் ஊழியர்களும் ஒன்றாக எழுந்து நின்று போராடுவோம். அரசாங்கத்தின் சமூக கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் BSNLக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கத்தை நிர்பந்தித்து இழப்பீட்டை பெற்றிடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள

**S.செல்லப்பா**
**மாநில செயலாளர்.**